பக்கங்கள்:-26

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 21 | திங்கட்கிழமை | 03.06.2024 | அதிர்வு 307

## சீரற்ற காலநிலையால் 10 பேர் பலி; ஐவர் மாயம்

(விரிவான செய்தி 18ஆம்பக்கத்தில்)



# மக்களைத் தொடர்ந்து வதைக்கும் தென்மேற்குப் பருவப்பெயர்ச்சி!

## பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணத்துக்கான நிதியை வழங்குமாறு ஜனாதிபதி அவசர பணிப்புரை

தென்மேற்குப் பருவப்பெயர்ச்சி மழையுடன் நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை உரிய மாவட்ட செயலாளர்களுக்கு உடனடியாக வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நிதி அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன், அனர்த்தம் காரணமாக முற்றாக சேதமடைந்த அனைத்து வீடுகளையும் அரச செலவில், முப்படையினர் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் சம்பந்தப்பட்ட 06▶



# தமிழ்ப் பொது வேட்பாளரை களமிறக்க ரெலோ பேராதரவு

## தலைமைக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்



(கனகராசா சரவணன்)

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்குத் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குகின்றது என அக்கட்சியின்தலைமைக்குழுக்கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று கட்சியின் ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமி தெரிவித்தார்.** 06▶

### குருநகர் கொஞ்சேஞ்சி மாதா சவக்காலையில்

## மட்டுவில் பெண்ணை எரித்துப் படுகொலை! சந்தேகநபருக்கு விளக்கமறியல் உத்தரவு!!



யாழ்ப்பாணத்தில் குடும்பப் பெண்ணொருவர் பெற்றோல் ஊற்றி எரித்துக் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் காதல் விவகாரம் இருந்தது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. பெண்ணை எரித்த நபர் யாழ்ப்பாணம் நீதிவான் 06▶



இலங்கையின் அண்மைக் காலத்தில் பெரும் அரசியல் குழப்பத்தை – களேபரத்தை – ஏற்படுத்தியவர் என்றால் அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்க பண்டாரவாகத்தான் இருக்க முடியும்.

ஜனாதிபதிக்கும் தற்போதைய நாடாளுமன்றத்திற்கும் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் இரண்டு வருட கால பதவி நீடிப்பு வழங்குவது என்ற அவரது 'பீலா' யோசனை, அவரது கட்சியைப் 'பூமராங்' ஆகத் திரும்பி வந்து தாக்க, கடைசியில் அவரது கட்சியினரே அவரைக் கைவிட்டு, 06▶



# வெள்ளத்தில் மூழ்கிய கப்! போராடி மீட்ட இளைஞர்கள்!!

பெலும்மஹர சந்தியில், கொடகெதர விகாரைக்குச் செல்லும் வீதிக்கு அருகாமையில், கப் வாகனம் ஒன்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் அதனைத் தடுக்க உள்ளூர் இளைஞர்கள் குழு ஒன்று கடுமையாக முயற்சித்துள்ளது.

நேற்றுப் பகல் முழுவதும் பெய்த கடும் மழை காரணமாக பெலும்மஹர – கடுவெல வீதியின் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

இந்நிலையில் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து ஓடையில் பயணிக்க முயன்ற கப் வாகனத்தை இளைஞர்கள் குழுவொன்று மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் மீட்டுள்ளனர்.





# களனி ஆற்றின் நீர் மட்டம் உயர்வதால் கொலன்னாவை மக்கள் இடம்பெயர்வு

தொடரும் அடைமழையால் களனி ஆற்றின் நீர் மட்டம் உயர்வடைகின்றது. இதனால் கொழும்பு – கொலன்னாவை பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலைக் கொலன்னாவ பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நேற்றுமுன்தினம் முதல் சீரற்ற காலநிலை நிலவி வருகின்றது. இதனால் பல இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதுடன், பாரிய மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன.

நாட்டின் பிரதான ஆறுகளில் நீர் மட்டம் உயர்ந்துள்ளமையால் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, கொலன்னாவை பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, நெலுவ வைத்தியசாலைக்கு செல்லும் வீதிகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் வைத்தியசாலையிலுள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் அவசர நோயாளிகள் அனைவரும் ஹெலிக்கொப்டர்கள் மூலம் உடுகம வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

உடுகம வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வாகனங்கள் செல்ல முடியாத நிலையில், ஹெலிக்கொப்டர்கள் மூலம் தாய்மார்கள் மற்றும் நோயாளிகள் அழைத்து வரப்பட்டுள்ளனர்.



# பல பகுதிகளில் மின் துண்டிப்பு

நாட்டில் தொடரும் அடைமழையால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காலி, களுத்துறை, இரத்தினபுரி, கொழும்பு மற்றும் கேகாலை மாவட்டங்களின் பல பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, வெள்ளத்தால் பாலம் சேதமடைந்ததால் அவிசாவளைக்கும் வகவுக்கும் இடையிலான ரயில் சேவைகள் முற்றாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.



# அடைமழையால் பஸ் மீது வீழ்ந்த விளம்பரப் பலகை

தொடர்ந்து பெய்து வரும் மழையுடன் கூடிய அதிக காற்று காரணமாக தனியார் பஸ் ஒன்றின் மீது விளம்பரப் பலகை வீழ்ந்து விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கொழும்பில் நேற்றுப் பிற்பகல் இடம் பெற்றுள்ளது.

காலி வீதியில் கொள்ளுப்பிட்டி சந்திக்கு அருகில் பொருத் தப்பட்டிருந்த விளம்பரப் பலகை, தனியார் பஸ் மீது வீழ்ந்துள் ளது.



# கையடக்கத் தொலைபேசியைக் கொள்ளையடித்து விற்பனை செய்த இருவர் வசமாக மாட்டினார்கள்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் கையடக்கத் தொலைபேசியைக் கொள் ளையடித்து விற்பனை செய்த சம்பவம் தொடர்பாக பொலிஸா ரால் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்துக்கு அருகில் தரித்து நின்ற ஓட்டோவின் டாஸ்போட்டில் வைத்து பூட்டப்பட்ட ஒரு இலட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசியை சைக்கிளில் வந்த மர்மநபர் ஒருவர் கொள்ளையடித்துச் சென்றார்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில் கண்கா ணிப்புக் கமராவின் காணொலியை அடிப்படையாகக் கொண்டு சந்தேகநபர் மானிப்பாய் – சாவல்கட்டு பகுதியில் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் யாழ். பிராந்திய பொலிஸ் புலனாய்வுப் பிரி வினரால் கைது செய்யப்பட்டு யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பொலிஸ் விசாரணையில் மேற்படி சந்தேகநபர் 30 ஆயி ரம் ரூபா பணத்துக்கு ஆறுகால்மடத்தைச் சேர்ந்தவருக்கு கையடக்கத் தொலைபேசியை விற்பனை செய்தமை தெரி யவந்தது.

இதனையடுத்து கையடக்கத் தொலைபேசியை வாங்கிய வரும் கைது செய்யப்பட்டு தொலைபேசி மீட்கப்பட்டது.

சந்தேகநபர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தொலைபேசியைத் திருடினார் எனக் கருதப்படும் சந்தேகநபர் சைக்கிள் திருட்டுகளில் 6 மாதங்கள் சிறைத்தண்டனை பெற்று விடுதலையானார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



# பாணந்துறையிக் பஸ்கள் நேருக்கு நேர் மோதி கோர விபத்து; ஒருவர் மரணம் நால்வர் காயம்!

பாணந்துறை பஸ் நிலையத்திற்கு அருகில் தனியார் பஸ்ஸும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இ.போ.ச பஸ்ஸின் நடத்துனர் உயிரிழந்துள்ளார். மேலும் நான்கு பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து இன்று காலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் பாணந்துறை டிப்போவில் கடமையாற்றும் நடத்துனர் என தெரியவந்துள்ளது.

இ.போ.ச. பஸ் பாணந்துறை பஸ் நிலையத்தை நோக்கி திரும்ப முற்பட்ட போது கொழும்பில் இருந்து பாணந்துறை நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தை அடுத்து தனியார் பஸ்ஸின் சாரதி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். அவரைக் கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பாணந்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# அச்சுவேலியில் வீடொன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்!

(கனகராசா சரவணன்)

யாழ். அச்சுவேலி பிரதேசத்தில் வீடு ஒன்றின் மீது இனந் தெரியாத குழு ஒன்று பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தியதில் அந்த வீடு பலத்த சேதமடைந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அச்சுவேலி மேற்கில் பண்ணை உரிமையாளர் ஒருவரின் வீட்டின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பண்ணை உரிமையாளருக்கும் அவரின் சகோதரிக்கும் இடையே சொத்து சம்பந்தமான பிரச்சினை இடம்பெற்று வந்துள்ளது.

இந்தநிலையில், நேற்று பண்ணை உரிமையாளர் தனது சகோதரியின் உறவினர் ஒருவரைத் தாக்கியதில் அவரின் கை முறிந்துள்ளது. இதையடுத்து இரவு 8 மணிக்கு 6 மோட்டார் சைக்கிள்களிலும், ஒரு ஓட்டோவிலும் சென்ற குழு ஒன்று பண்ணை உரிமையாளரின் வீட்டின் மீது இரண்டு பெற்றோல் குண்டுகளை வீசி எறிந்துவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

இதில் ஒரு குண்டு மட்டும் வெடித்து தீப்பற்றியதையடுத்து வீட்டின் சமையலறைப் பகுதி பலத்த சேதமடைந்துள்ளது.

வீட்டில் இருந்த எவருக்கும் எதுவிதமான சேதமும் ஏற்படவில்லை என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவரது கருத்துக்கு மாறாக பகிரங்கமாகக் கருத்துரைக்க வேண்டியதாயிற்று.

ஆளும் தரப்புப் பிரமுகர்கள் மட்டு மன்றி, அவரது ஐக்கிய தேசிய கட்சியின் பெரிய தலைகளே, அந்தத் திட்டத்தை மறுத்துரைத்து 'பாதிப்பு சமாளிப்பு' (Damage Clearing) செய்யவேண்டிய தாயிற்று. ஏன், ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்கவும் பிரதமர் தினேஷ் குணவர் தனம் கூட, ஜனாதிபதித் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படும் என்று விடயத் தைத் திருத்தி அறிவிக்க வேண்டியவர் களானார்கள்.

எல்லாகட்சிகளும்,எல்லாதரப்புக்களும் தமது யோசனைத் திட்டம் தொடர்பில் தம் மீது பாய்ந்து விழுந்தமையை அடுத்து, என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறிப் போன ஓய்வு பெற்ற சப் இன்ஸ் பெக்டரான பாலித ரங்க பண்டார, தமது கருத்துக்கள் தொடர்பில் விமர்சனங்கள் கூறியவர்கள் குறித்து ஆறுதலாக இன்று செய்தியாளர் மாநாடு ஒன்றைக் கூட்டி பதிலடி தருவார் எனத் தெரிவித்திருக் கின்றார்.

கொழும்புசெய்திவட்டாரங்கள்எல்லாம் இன்றைய அந்த ஊடக மாநாட்டுக்காகக் காத்திருக்கின்றன.

இதற்கிடையில் –

மொட்டுக் கட்சியுடன் நெருக்கமாகப் பழகும் ஒரு தரப்பு நேற்று ஒரு தகவலை அவிழ்த்து விட்டுள்ளது.

மொட்டுக் கட்சியின் வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க இறங்கக் கூடிய இணக்கநிலை அடுத்து வரும் பத்துப் பன்னிரண்டு நாள்களில் எட்டப்படாவிட் டால், மொட்டுக் கட்சி தனது வேட்பாளரை தன்பாட்டில் அறிவிக்கும். அது பலரும் எதிர்பார்ப்பது போல பிரபல கோடீஸ்வர வர்த்தகர் தம்மிக்க பெரேரா அல்லர். ஏற் கனவே மூன்று முனைப் போட்டியிருக்கை யில் தான் நான்காவது முனையாகக் களத்தில் இறங்க அவர் விரும்பவில்லை யாம். நாட்டின் தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தனவை மொட்டு தனது வேட்பாளராகக் களம் இறக்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றார் அவர்.

அப்படி ஒரு நிலைமை வந்து, ரணி லும் போட்டியிட்டால், அதனோடு சேர்ந்து, தான்களமிறங்குவார்என்றுநீதிஅமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கூறி வருவதும் சாத்தியமாகுமானால், ஜனாதிபதி தேர் தலுக்கு முன்னர் வரை அமைச்சரவை யில் ஒன்றாக அமர்ந்திருந்த ஜனாதி பதி, பிரதமர், நீதி அமைச்சர் மூவரும் எதிரும் புதிருமாக தேர்தலில் நிற்கும் அரசியல் அதிசயம் இலங்கையில்தான் நடந்ததாக இருக்கும்....!

## தமிழ்ப் பொது வேட்பாள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மட்டக்களப்பு, வாவிக்கரையிலுள்ள கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணா கரத்தின் காரியாலத்தில் நேற்று நடை பெற்ற ஊடக மாநாட்டில் கட்சியின் தலை வர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், உப தலைவர் ஹென்றி மகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு இந்தத் தீர்மானத்தை வெளியிட்டனர்.

இதன்போது ரெலோ கட்சியின் ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமி மேலும் தெரிவித்ததாவது:–

"மட்டக்களப்பு மாவட்டத்தில் நடை பெற்ற தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைமைக் குழுக் கூட்டத்தில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது பற்றிய விரிவான கலந்துரையாடல் நடைபெற் றது.

கடந்த கால எமது அனுபவங்களின் அடிப்படையில் தமிழ் மக்கள் மத்தியில் பொது வேட்பாளர் என்ற நிலைப்பாடு எழுந்துள்ள சூழ்நிலையிலும், காலத்தின் தேவை மற்றும் சூழ்நிலைகளைக் கருத் தில்கொண்டும் பொது வேட்பாளர் என்ற கோரிக்கைக்கு ஆதரவு நிலைப்பாட்டை எமது கட்சியின் தலைமைக் குழு எடுத்தி ருக்கின்றது.

இந்தக் கோரிக்கையானது வெற்றிய ளிப்பதற்குத் தமிழ்த் தேசிய தரப்பில் இருக்கும் அனைவரும் ஒன்றிணைந்து பொது வேட்பாளரை முன் நிறுத்த வேண் டிய அவசியத்தையும் நாம் வலியுறுத் துகின்றோம்.

அதேவேளை, அனைத்து தமிழ்த் தரப் பினர்களையும் ஒருங்கிணைக்கும் தற் போதைய முயற்சிக்கு நமது பூரண ஆதர வையும் ஒத்துழைப்பையும் வழங்குவதாக வும் தீர்மானித்துள்ளோம்." – என்றார்.

## மட்டுவில் பெண்ணே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப் பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளார்.

யாழ்ப்பாணம், குருநகர், கொஞ்செஞ்சி மாதா சவக்காலையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இந்தக் கொடூர சம்பவம் இடம் பெற்றது.

சாவகச்சேரி, மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த இரத்தினவடிவேல் பவானி (வயது 45) என்ற குடும்பப் பெண்ணே எரித்துக் கொல்லப்பட்டார்.

இந்தப் பெண்ணுக்குத் திருமணமாகி 3 பிள்ளைகள் உள்ளனர். மூத்த மகன் வெளிநாட்டில் உள்ளார். 20 வயதான மற்றொரு மகனும், உயர்தரம் கற்கும் மகளும் உள்ளனர். கணவர் நீண்டகால மாக இருதய நோயால் பாதிக்கப்பட் டுள்ளார்.

கடந்த 7 வருடங்களுக்கு மேலாக, தன்னை விட 5 வயது இளைய மற் றொரு ஆணுடன் பவானி நெருக்கமாகப் பழகி வந்துள்ளார். திருமணத்தை மீறிய இந்த உறவே கொடூர கொலையில் முடிந் துள்ளது.

குருநகரைச் சேர்ந்த அந்த நபர், யாழ்ப் பாணம் திறந்த பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தராகப் பணி புரிகின்றார்.

பவானியைக் கொலை செய்து, காதல் தொல்லையிலிருந்து தப்பிக்க அந்த நபர் தீர்மானித்துள்ளார்.

கொலைக்கான திட்டங்களை வகுத்து விட்டு, பவானியை ஏமாற்றி அழைத் துள்ளார். காலம் உள்ளவரை பவானியு டன் சேர்ந்து வாழ்வேன் எனக் குருநகர், கொஞ்சேஞ்சி மாதா சவக்காலையில் அடக்கம் செய்யப்பட்ட தனது தாயின் கல்லறையில் சத்தியம் செய்து, தனது காதலை நிரூபிப்பதாகவும், இதற்காகப் பவானியை வருமாறும் அந்த நபர் அழைத்துள்ளார்.

இதை நம்பிய பவானி நேற்றுமுன் தினம் அந்த நபருடன் மோட்டார் சைக்கி ளில் அங்கு வந்துள்ளார்.

சவக்காலையின் பின்புறமாக உள்ள பகுதியில் அமைந்துள்ள தனது தாயின் கல்லறைக்கு அண்மையில், ஒரு வகை நச்சுப் பொருளை அந்த நபர் மறைத்து வைத்திருந்துள்ளார்.

பவானியை அந்தப் பகுதிக்கு அழைத் துச் சென்று, பேசிக் கொண்டிருந்தவர், திடீரென மறைத்து வைத்திருந்த நச்சுப் பொருளை பவானி மீது பிரயோகித்துள் ளார். இதனால் நிலைகுலைந்த பவானி நிலத்தில் வீழ்ந்துள்ளார். அவர் செயலற்ற தன்மையில் இருந்தபோது, மறைத்து வைத்திருந்த பெற்றோலைப் பவானியின் முகம், தலையில் ஊற்றி தீமூட்டினார்.

பவானியின் மீது அவர் பெற்றோலை ஊற்றிய போது, அது தவறி அருகிலுள்ள புல்களிலும் பரவியது. பவானியைத் தீமூட்டிய போது, அது புற்களிலும் பரவி புகை மேலெழுந்தது. பவானியின் கதறல் சத்தத்தாலும் அங்கு மேலெழுந்த புகை யினாலும்சந்தேகமடைந்தசவக்காலைக்கு அருகில் வீடுகளில் இருக்கும் மக்கள், சவக்காலைக்குள் எட்டிப் பார்த்தபோது, பெண்ணொருவர் தீயில் எரிவதையும், தீமூட்டியவர் தப்பியோடுவதையும் கண்ட னர்.

உடனடியாகச் செயற்பட்ட அவர்கள், பிரதேச மக்களின் உதவியுடன் தீயை அணைத்து, பவானியை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

மேற்படிபெண் முகம்,தலைப் பகுதியில் கடுமையாகக் காயமடைந்து – 85 வீத தீக்க ாயங்களுக்குள்ளாகி இருந்தமையால் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

## மக்களைத் தொடர்ந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

தரப்பினருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பான முழுமையான திட்ட மொன்று ஜனாதிபதியின் தேசிய பாது காப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானிய மான சாகல ரத்நாயக்க மற்றும் ஜனாதி பதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரின் தலைமையில் இன்று முதல் அமுல்படுத்தப்படவுள்ளது.

தற்போது பொது நிர்வாக அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, முப்படையினர் மற்றும் பொலிஸ் மற்றும் சிவில் பாது காப்புத் திணைக்களம், அனர்த்த முகா மைத்துவ நிலையம், மாவட்ட செயலகங் கள், பாதிக்கப்பட்ட அனைத்து பிரதேச செயலகங்களின் அத்தியாவசிய உத்தி யோகத்தர்கள் மற்றும் பிரதேச அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் கிராம சேவ கர்கள் உள்ளிட்ட குழுவினர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான அனைத்து உத விகளையும் செய்து வருகின்றனர்.

அந்த அனைத்து அதிகாரிகளின் அர்ப்பணிப்பையும் பாராட்டிய ஜனாதிபதி, சேவைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத் துச் செல்வதற்காகவும் பொதுமக்களுக்கு அன்றாட வாழ்க்கை நிலைமைகளை பேணுவதற்காகவும் வழங்கக்கூடிய அனைத்து ஆதரவையும் அரசு உடனடி யாக வழங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

25 மாவட்ட செயலகங்களின் கீழ் அமைந்துள்ள மாவட்ட அனர்த்த முகா மைத்துவ நிலையங்களை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற கலந்துரையாட லின்போது தனக்கு அறிவுறுத்தல் வழங் கப்பட்டது என்று அனர்த்த முகாமைத் துவ நிலையத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அதிப திலகரத்ன தெரிவித்துள்ளார்.

முப்படைகள், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்கள 07▶

# பொன்சேகா, ராஜித ஐ.தே.க. பக்கம் தாவல்?





தெற்கு அரசியலில் கட்சி தாவல் இடம்பெறவுள்ளது எனத் தெரியவருகின்றது.

நாடாளுமன்றம் நாளை கூடுகின்றது. இதன்போது சரத் பொன்சேகா, ராஜித சேனாரத்ன உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைவார்கள் என்று அறியமுடிகின்றது.

இதற்கான பேச்சுகள் வெற்றியளித்துள்ளது என்றும், நாளை கட்சி தாவல் உறுதி என்றும் ஐ.தே.க. உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார் என்று தெற்கு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# இரண்டு இயந்திரத் துப்பாக்கிகளுடன் பெண் உட்பட இருவர் நேற்றுக் கைது







இரண்டு இயந்திரத் துப்பாக்கிகளுடன் பெண் உட்பட இருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சேதாவத்தை பிரதேசத்தில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் இரண்டு ரி 56 ரக துப்பாக்கிகள், இரண்டு மகசின்கள், 26 தோட்டாக்கள் மற்றும் 100 கிராம் ஹெரோயின் என்பன வெல்லம்பிட்டிய பிரதேசத்தில் நேற்று அதிகாலை கைப்பற்றப்பட்டுள்ளன எனக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் டுபாயில் தலைமறைவாக உள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான சேடவத்த கசுனின் நெருங்கிய சகாக்கள் எனத் தெரியவந்துள்ளதாகவும் அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்கள் இருவரும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## மக்களைத் தொடர்ந்து...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி....)

அதிகாரிகளின் ஒத்துழைப்பையும் பெறுவதற்கு இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், வெள்ள இடர்களைக் கையாள்வதற்குப் பயன்படுத்தக்கூடிய தேவையான வாகனங்கள், படகுகள் அல்லது ஹெலிக்கொப்டர்கள் ஆகியவற்றை வழங்குவதற்கு உடன்பாடு காணப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதற்கிணங்க கடற்படை, விமானப்படை மற்றும் இராணுவம் என்பன அந்த பணிகளில் முழுமையாக ஈடுபட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன ஆகியோர் கலந்துகொண்ட இந்தச் சந்திப்பில் அதிக பாதிப்புக்குள்ளான மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள் டிஜிட்டல் முறையில் இணைந்து கொண்டனர்.

தேவையற்ற வகையில் வீதிகளுக்கு வருவதைத் தவிர்க்குமாறும், வெள்ளம் அல்லது அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறும், வெள்ளம் அல்லது நீர்நிலைகள் உள்ள இடங்களில் நீர் விளையாட்டுகளில் ஈடுபட வேண்டாம் என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பதில் பணிப்பாளர் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவசர நிலைகளைத் தெரிவிப்பதற்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலதிக நிவாரணங்களை வழங்குவதற்கும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 117 என்ற அவசர தொலைபேசி இலக்கமானது 24 மணி நேரமும் செயற்படும். சேவைகளுக்கு நேரடியாக பங்களிக்க வேண்டிய அனைத்து அரச நிறுவனங்களும் அதிகாரிகளும் இதன் ஊடாக இணைக்கப்பட்டு வசதிகள் செய்து தரப்படும் என்றும் பதில் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மழை காலத் தொல்லை

மாரி காலம் போல நாடு முழுவதும் மழை கொட்டித் தீர்க்கின்றது. பருவமழை தீவிரமடைந்துள்ளமையால் பருவ கால நோய்களும் தம் கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டன. இவை குறித்து சுகாதார - மருத்துவத்துறையினர் முற்கூட்டியே எச்சரிக்கைகளை விடுக்கத் தொடங்கி விட்டனர்.

எலிக்காய்ச்சல், இன்புளுவன்சா வைரஸ், டெங்கு போன்றவற்றின் பரவல் மக்களை நெருக்கடியில் ஆழ்த்தும் ஆபத்து இருப்பதாகவும், ஆகவே பொதுமக்கள் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் சுகாதாரத் துறையினர் ஆலோசனை கூறுகின்றனர். அவற்றைக் கவனத்தில் கொள்வது கட்டாயமானதாகும்.

மழை காலத்தில் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் சுவாச நோய்களுக்கு மிகவும் எளிதில் பாதிக்கப்படுகின்றனர். அதனால் இயன்றவரை முகமூடிகளை அணியப் பரிந்துரைக்கப்படுகின்றது.

இன்புளுவன்சா வைரஸ் மழைக்காலத்தில் பரவ முனைகிறது என்றும் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

அதிக ஈரப்பதம் மற்றும் ஈரமான சூழல்கள் சுவாச நோய்த்தொற்றுகளின் அபாயத்தை அதிகரிக்கின்றன. மழைக்காலத்தில், ஜலதோஷம், காய்ச்சல், ஆஸ்துமா போன்றவற்றின் அதிகரிப்பை அடிக்கடி காண்கிறோம். எனவே, வறண்ட, நாள்பட்ட சுவாசப் பிரச்சினைகளை இச்சமயத்தில் சந்தித்தால் மருத்துவரை அணுகுவதும் மிக அவசியம் என்று ஆலோசனை கூறப்படுகின்றது.

எலிக்காய்ச்சல் என்றும் குறிப்பிடப்படும் 'லெப்டோஸ்பிரோசிஸ்' கவலைக்குரியது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. பாதிக்கப்பட்ட விலங்குகளின் சிறுநீர் சுற்றுச்சூழலை மாசுபடுத்தும். அதனால் வெள்ளப் பகுதிகளில் இது பரவக்கூடும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான எலிக்காய்ச்சல் தொற்றுகள் பதிவாகி வருகின்றன.

எலிக்காய்ச்சல், ஒரு விலங்கியல் நோய். இலங்கையில், குறிப்பாக விவசாயிகள், சுரங்கத் தொழிலாளர்கள் மற்றும் உடலுழைப்புத் தொழிலாளர்கள் மத்தியில் இது பொதுவானது என்று புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

ஜனவரி மூன்றாவது வாரம் வரை, 1,000 க்கும் மேற்பட்ட எலிக் காய்ச்சல் நோய்த் தொற்றுகள் பற்றி அறிவிக்கப்பட்டிருந்தது. வருடா வருடம் இத்தொற்று அதிகரித்து வருவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

அடுத்து மோசமான பாதிப்பைத் தந்து நிற்பது டெங்கு நோய்.

கடந்த சில மாதங்களாக மழைக்கு முன் டெங்கு பரப்பும் நுளம்பின் உற்பத்தி, நாடு முழுவதிலும் ஒன்றிணைக்கப்பட்ட நடவடிக்கைகள் மூலம் கட்டுப்படுத்தப்பட்டதாயினும், மீண்டும் மழை தொடங்கியபோது நிலைமை கட்டுமீறுவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் மருத்துவ அதிகாரி டாக்டர் இந்திரலிங்கம் கூறுகிறார்.

“டெங்குவை முழுமையாகக் கட்டுப்படுத்தப் பயனுள்ள தடுப்பூசிகள் எதுவும் இல்லை. இந்நோயைப் பரப்பும் நுளம்புகளை அழிக்க புகையடித்தல் மற்றும் இரசாயனங்களைப் பயன்படுத்துகிறோம். இருப்பினும், புகையடித்தல் மிகவும் பயனுள்ளதாக இல்லை. ஏனெனில் இது சுற்றுச்சூழலில் வளர்ந்த கொசுக்களை மட்டுமே கொல்லும். உண்மையான அச்சுறுத்தல் வளர்நிலையில் இருக்கும் குடம்பிகளிடம்தான் உள்ளது. குடம்பிகளை நாம் கொல்ல வேண்டும். ஆனால் அவை பெருகுவதைத் தடுக்க இனப்பெருக்க ஆதாரங்களைக் குறைப்பது நல்லது. இது டெங்கு தடுப்புக்கான ஒரு முக்கிய அம்சமாகும்” - என்று டாக்டர் இந்திரலிங்கம் குறிப்பிடுகின்றார்.

டெங்கு பரப்பும் நுளம்புகள் பகலில் சுறுசுறுப்பாக இருக்கின்றன. அதனால் அந்த நுளம்புப் பரவல் உள்ள பிரதேச மக்கள் பகலில் நீண்ட கை சட்டைகள் மற்றும் கால்சட்டைகளை அணிய அறிவுறுத்தப்படுகிறார்கள் என்றும் கூறப்படுகின்றது.

அப்பிரதேசங்களில் தேங்கி நிற்கும் நீர், குளங்கள், ஏரிகள், வனக் குளங்கள், நீர்ப்பிடிப்புப் படுகைகள், சதுப்பு நிலங்கள், மாசுபட்ட நீர் மற்றும் நுளம்புகள் அதிகமாகக் காணப்படும் பகுதிகளில் நுளம்புக் குடம்பிகளைக் கொல்ல வலுவான இரசாயனம் பயன்படுத்தப்படுகிறது.

ஆயினும் இவற்றை எல்லாம் தாண்டி மோசமான பாதிப்புகளை இந்த நோய்த் தொற்றுகள் சமூகத்துக்கு ஏற்படுத்தி வருகின்றமை கண்கூடு.

மக்கள் கொஞ்சம் முன்னெச்சரிக்கையாக - அவதானமாக - சமூகப் பொறுப்புணர்வு எண்ணத்துடன் - செயற்பட்டால் மாத்திரமே இந்தப் பிணிகளில் இருந்து ஓரளவு தப்பிக்கலாம்.

# கருத்துக் கணிப்புகளை விட அதிக இடங்களில் பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெறும்: ஜி.கே.வாசன்



கருத்துக் கணிப்பை விட அதிக இடங்களில் பாஜக கூட்டணி வெற்றி பெறும் என த.மா.கா. தலைவர் ஜி.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“மக்களவைத் தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகளைவிட இந்திய அளவில் அதிக இடங்களில் பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெறும். அதேபோல் தமிழகத்திலும் பல இடங்களில் பா.ஜ.க. கூட்டணி வெல்லும். பா.ஜ.க. கூட்டணியின் தேர்தல் பணிக்கு தமிழக மக்கள் நல்ல அங்கீகாரம் வழங்குவார்கள் என்று நம்புகிறேன்.

மூன்றாவது முறையாக மோடி பிரதமராக பதவி ஏற்று நல்லரசாக உள்ள இந்தியாவை வல்லரசாக மாற்றுவார். பதவிகளுக்கு அப்பாற்பட்டு நாட்டின் நலன் கருதி பா.ஜ.க. கூட்டணியில் த.மா.கா. தொடர்ந்து நீடிக்கும். ஒரு கட்சியின் வெற்றி, தோல்விகளை மக்கள் தான் தீர்மானிப்பர். அ.தி.மு.க. பற்றி அண்ணாமலை பேசுவதில் தவறில்லை. தமிழகத்தில் பா.ஜ.க, தி.மு.க, அ.தி.மு.க. என மூன்று அணிகள் உள்ளன. அவர்களுக்குள் ஒத்த கருத்து இல்லை.

அனைத்து கட்சிகளுக்கும் ஒவ்வொரு தேர்தலிலும் வாக்கு சதவீதம் மாறும். தி.மு.கவிலும் ஒரு காலத்தில் 2 எம்.எல். ஏக்கள் மட்டும் இருந்தனர். ஒரு காலத்தில் பா.ஜ.கவில் கூட மிக குறைந்த எம்.பிக்களே இருந்தனர். தேர்தலில் வெற்றி, தோல்வி என்பது சகஜம்.

தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளாக மக்கள் விரோத ஆட்சி தான் நடந்து கொண்டிருக்கிறது. மக்கள் மீது சுமையை சுமத்தியுள்ளதை யாராலும் மறக்க முடியாது. மன்னிக்கவும் முடியாது. எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு தமிழக சட்டபேரவைத் தேர்தலில் பா.ஜ.க. தலைமையில் அதிக கட்சிகளுடன் கூட்டணி அமையும். மீண்டும் காமராஜர் ஆட்சிக்கு பா.ஜ.க. துணை நிற்கும்.”– என்றார்.

# புயலால் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து பிரதமர் மோடி விசேட கலந்துரையாடல்

இந்தியாவில் அண்மையில் ஏற்பட்ட ரிமெல் புயல் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாநிலங்களில் ஏற்பட்டுள்ள மழை வெள்ள பாதிப்புகள் காரணமாக இதுவரை 30 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாநிலங்களில் புயல் மற்றும் மழை வெள்ள பாதிப்புகளுக்குப் பின்னர் தற்போது அங்குள்ள நிலவரம் குறித்து ஆய்வு செய்ய பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் டில்லியில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் வடக்கு கிழக்கு மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் தொடர்பாக அதிகாரிகளுடன் பிரதமர் மோடி ஆலோசனை நடத்தியுள்ளார்.



மத்திய கிழக்கு வங்கக் கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் கடந்த மாதம் 25 ஆம் திகதி புயலாக உருமாறியது.

‘ரிமெல்’ எனப் பெயரிடப்பட்ட இந்த புயல் வடக்கு திசையில் நகர்ந்து மேற்கு வங்காளம் மற்றும் வங்கதேசம் இடையே 26ஆம் திகதி இரவு கரையை கடந்தது.

# கருணாஸின் கைப்பையில் 40 துப்பாக்கிக் குண்டுகள்

## சென்னை விமான நிலையத்தில் பரபரப்பு



திருச்சி செல்வதற்காக சென்னை விமான நிலையம் சென்ற நடிகர் கருணாஸின் கைப்பையில் 40 துப்பாக்கி குண்டுகள் இருந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

சென்னை விமான நிலையத்தில் இருந்து திருச்சி செல்லும் பயணிகள் விமானம் நேற்று காலை புறப்பட தயாராகிக் கொண்டிருந்தது. பயணிகளையும், அவர்களின் உடைமைகளையும் பாதுகாப்பு அதிகாரிகள் சோதனை செய்து அனுப்பி கொண்டிருந்தனர்.

அப்போது, அந்த விமானத்தில் திருச்சி செல்வதற்காக நடிகரும், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினரும், முக்குலத்தோர் புலிப்படை தலைவருமான கருணாஸ் சென்றார். அவரது கைப்பையை பாதுகாப்பு அதிகாரிகள் ஸ்கேன் செய்த போது, அதில் வெடிபொருள் இருப்பதற்கான எச்சரிக்கை அலாரம் ஒலித்தது. உடனே அந்தப்பையில் என்ன இருக்கிறது என்று கருணாஸிடம் அதிகாரிகள் விசாரித்த போது, அதில் அப்படி ஒன்றும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

அந்த கைப்பையை வாங்கி அதிகாரிகள் சோதனை செய்த போது, அதில் 2 பெட்டிகளில் தலா 20 குண்டுகள் வீதம் மொத்தம் 40 துப்பாக்கி குண்டுகள் இருந்தன. இதையடுத்து, கைத்துப்பாக்கியில் பயன்படுத்தக்கூடிய 40 குண்டுகளையும் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து கருணாஸிடம் நடத்திய விசாரணையில்,

“நான் துப்பாக்கி லைசென்ஸ் வைத்துள்ளேன். இந்த குண்டுகள் அனைத்தும் என்னிடம் உள்ள கைத்துப்பாக்கியில் பயன்படுத்தக்கூடியவை. நான் அவசரமாக புறப்பட்டு வந்ததால், எனது கைப்பையில் இருந்த துப்பாக்கி குண்டுகள் இருந்த 2 பெட்டிகளையும் கவனிக்கவில்லை. துப்பாக்கி குண்டுகள் இருந்த கைப்பையை தெரியாமல் எடுத்து வந்து விட்டேன்” என்று தெரிவித்தார்.

தனது துப்பாக்கி லைசென்ஸ் மற்றும் அதுதொடர்பான ஆவணங்களை கருணாஸ் காட்டியுள்ளார்.

இதைத்தொடர்ந்து, கருணாஸின் திருச்சி பயணத்தை ரத்த செய்த அதிகாரிகள், பறிமுதல் செய்த துப்பாக்கி குண்டுகளை கொடுத்து, இனிமேல் இப்படி செய்யாதீர்கள் எனக்கூறி அனுப்பி வைத்தனர்.

இந்த சம்பவத்தால் திருச்சி செல்ல வேண்டிய பயணிகள் விமானம் 30 நிமிடங்கள் தாமதமாக புறப்பட்டது. இதனால், சென்னை விமான நிலையத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# நிலவில் தரையிறங்கியது சீன ‘சாங்கே-6’ விண்கலம்





சீனாவின் சாங்கே-6 விண்கலம் நேற்று நிலவின் அய்த்கன் பேசின் என்ற தென்துருவத்தின் பெரிய பள்ளத்தில் தரையிறங்கியதை சீன அரசாங்கம் உறுதிப்படுத்தியது.

அதன்படி நிலவில் மாதிரிகளை சேகரித்துக் கொண்டு எதிர்வரும் 25 ஆம் திகதி சாங்கே - 6 எனும் விண்கலம் பூமிக்கு திருப்பும் எனவும் அந்த நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சீனாவின் இந்த திட்டத்தின்படி, இயந்திர கரம் மற்றும் துளை போடும் இயந்திரத்தின் உதவியுடன் நிலவின் மேல்பரப்பு மற்றும் அடிப்பரப்பில் உள்ள 2 கிலோ அளவிலான பொருள்களைச் சேகரித்து அவற்றை உலோக கன்டெய்னரில் நிரப்பி ஆர்பிட்டருக்கு திரும்பி கொண்டு வரும்.

தொடர்ந்து கன்டெய்னர் பொருள்கள் கேப்சூலுக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் சீனாவின் இன்னர் மங்கோலியா பகுதியிலுள்ள பாலைவன பகுதியில் வந்து தரையிறங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு போட்டியாக சீனாவும் களமிறங்கி உள்ளதுடன், சீனாவின் நிலவுக் கடவுளான சாங்கே என்ற பெயரிலான திட்டத்தின் கீழ் விண்கலங்கள் அடுத்தடுத்து அனுப்பப்பட்டு வருகின்றன.

இவற்றில், 2020 ஆம் ஆண்டில் சாங்கே-5 விண்கலம் நிலவில் சென்று மாதிரிகளை சேகரித்து பூமிக்கு திரும்பியது. இதன் தொடர்ச்சியாக, தற்போது சாங்கே - 6 எனும் விண்கலம் நிலவிற்கு அனுப்பப்பட்டு ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சீன - பாகிஸ்தானுக்கிடையில் மற்றுமொரு விமான சேவை

பாகிஸ்தானின் கராச்சியில் இருந்து சீனாவின் குய்சோ நகருக்கு புதிய விமானப் போக்குவரத்துச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சேவைகள் வாரத்துக்கு 3 முறை இயக்கப்படும் என சீனாவின் விமானப் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

முன்னர் கடந்த ஜனவரி மாதம் சீனாவின் ஹுபே மாகாணத்தில் இருந்து பாகிஸ்தானின் லாகூருக்கு நேரடி விமான சரக்குப் போக்குவரத்து தொடங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷெரீப் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நாளை சீனா செல்லவுள்ளார்.



அங்கு 5 நாள்கள் தங்கும் அவர் சீன ஜனாதிபதி ஜின்பிங், பிரதமர் லீ கியாங் ஆகியோரை சந்தித்து இரு தரப்பு வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது குறித்து விவாதிக்க உள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

# டயானாவின் கடிதங்கள் ஏலத்திற்கு வருகின்றன



பிரித்தானியாவின் மறைந்த இளவரசி டயானா எழுதிய கடிதங்கள் ஏலத்திற்கு வரவுள்ளன என தகவல்கள் வெளியாகியுள்ளது.

இளவரசி டயானா தனது முன்னாள் வீட்டுப் பணிப்பெண் ஒருவருக்கு எழுதிய கடிதங்கள் மற்றும் அஞ்சல் அட்டைகள் ஜூன் 27 ஆம் திகதியன்று ஏலம் விடப்படவுள்ளன என எதிர்பார்க்கப்படுகின்றது.

1981 இல் அப்போதைய இளவரசர் சார்லஸுடன் டயானாவின் திருமணத்திற்குப் பிறகு இளவரசி மற்றும் அவரது முன்னாள் வீட்டுப் பணிப்பெண்ணுக்கு இடையிலான கடிதங்கள் இதில் அடங்குகின்றன.

இதில் 1981-1985 இல் பரிமாறப்பட்ட 14 கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு அட்டைகளும் அடங்குகின்றன என கூறப்படுகின்றது.

மேலும், பெவர்லி ஹில்ஸில் உள்ள ஜூலியன்ஸ் ஏல நிறுவனத்தால் இந்த ஏலம் நடத்தப்படவுள்ளதுடன், இதன் மதிப்பு லட்சக்கணக்கான டொலர்களை எட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த கடிதங்கள், இளவரசி டயானாவின் தனிப்பட்ட வாழ்க்கையின் சிறந்த தருணங்கள் மற்றும் மைல்கற்களை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

இந்த கடிதங்களிலிருந்து அவரை பற்றிய சுவாரஸ்யமான தகவல்கள் கிடைக்கபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மன்னர் சார்லஸிடம் இருந்து 1996 ஆம் ஆண்டு விவாகரத்து பெற்ற டயானா, 1997 ஆம் ஆண்டு நடந்த கார் விபத்தில் மரணமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





# அரசமைப்பிற்கு அமைவாக பௌத்தத்திற்கு முன்னுரிமை

## ஜனாதிபதி ரணில் கூறுகின்றார்

"அரசமைபிற்கு அமைவாக பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அந்த கொள்கையை பாதுகாக்கும் பொறுப்பு நிறைவேற்றதிகாரம், சட்டவாக்கம், நீதித்துறை உள்ளிட்ட 3 துறைகளுக்கும் இருப்பதை எவரும் மறுக்க முடியாது."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஹோமாகம, கிரிவத்துடுவவில் நிர்மாணிக்கப்பட்ட "குருதேவ சுவ அரண" பிக்குகளுக்கான நிலையத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொஹுவளை விகாரையின் விகாராதிபதியாகவும், இலங்கை ரமண்ய நிக்காயாவின் தலைமைப் பதிவாளராவும் இருந்த, மறைந்த வண. மாபாலகம சிறி சோமிஸ்ஸர நாயக்க தேரரின் எண்ணக்கருவுக்கு அமைய இலங்கை மற்றும் வெளிநாட்டு பிக்குகளுக்காக இந்த "குருதேவ சுவ அரண" நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

ஐந்து மாடிக் கட்டடம் கொண்ட இந்த நிலையத்தில், 3 மாடிகளில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ நிலையத்தில் ஒரே நேரத்தில் ஐம்பது பிக்குகள் சிகிச்சை பெறலாம். அலுவலக அறைகள், வார்டு, அம்புலன்ஸ், மருந்தகம், மருத்துவர்களுக்கான தங்குமிடங்கள், அவசர சிகிச்சை பிரிவு உள்ளிட்ட வசதிகள் இங்கு உள்ளன.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

"இலங்கையில் பிக்குகளுக்காகக் கட்டப்பட்ட முதலாவது வைத்தியசாலை இதுவாகும். நம் நாட்டில் உள்ள மருத்துவமனைகளில் பிக்குகளுக்கான வார்டுகள் மட்டுமே இருந்தன. இந்த மருத்துவமனை நோய்வாய்ப்பட்ட பிக்குகளுக்காகக் கட்டப்பட்டுள்ளது. இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி.

இதன் பணிகளை முன்னெடுத்துச் செல்ல சுதேச வைத்திய அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது. அதேபோல் இதன் அபிவிருத்திக்கு அரசாங்கம் ஆதரவளிக்கும். 12

















# அரசமைப்பிற்கு அமைவாக பௌத்தத்திற்கு முன்னுரிமை

## ஜனாதிபதி ரணில் கூறுகின்றார்

(11ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இப்போது அரசாங்கத்தையும் பௌத்தத்தையும் பிரிக்க வேண்டியது அவசியம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. அதன் சட்டத் தன்மை பற்றி சிந்திக்கும்போது, நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் அவரவர் விருப்பப்படி ஒரு மதத்தைப் பின்பற்ற உரிமை உண்டு. மேலும் எந்த மதத்திலும் நம்பிக்கை கொள்ளாமல் இருப்பதற்கான உரிமையும் உள்ளது.

மேலும், எந்தவொரு அரசாங்கமும் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என அரசமைப்புச் சட்டம் கூறுகிறது. அந்தப் பொறுப்பு தற்போதைய அரசாங்கத்துக்கும் உள்ளது. ஜனாதிபதி தலைமையிலான நிறைவேற்றுத் துறை, சபாநாயகர் தலைமையிலான சட்டவாக்கத் துறை, பிரதம நீதியரசர் தலைமையிலான நீதித்துறை உள்ளிட்ட 3 துறைகளும் பௌத்த கோட்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டியது அவசியமாகும்.

இதற்கு ஆதரவளிக்கத் தவறுவது அரசமைப்புக்கு எதிரானதாகும். எம்.பி.க்கள் அனைவரும் அரசமைப்பை பின்பற்றுவோம் என உறுதிமொழி எடுத்துள்ளோம். எனவே, இந்த நாட்டில் யுத்தம் இடம்பெற்றிருந்தாலும் இவ்வாறானதொரு கோரிக்கை இதுவரை முன்வைக்கப்படவில்லை. அது பற்றிப் பேசப்படவும் இல்லை.

சட்ட ஏற்பாடுகள் பற்றி விவாதிக்கலாம். ஆனால், கோட்பாடுகள் தொடர்பில் விவாதிக்க முடியாது. அரசாங்கம் என்ற வகையில் அதனைப் பின்பற்ற வேண்டும். இதை மாற்ற விரும்புவோர் அரசமைப்பையே மாற்ற வேண்டும்.

இறக்கும் நிலையில் உள்ள நோயாளியை குணப்படுத்தும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது நோயாளி படிப்படியாக குணமடைந்து வருகிறார். அது பற்றி தொடர்ச்சியாக ஆலோசிக்கிறோம். உலகில் எந்த நோயாளியும் ஒரே தடவையில் குணமடைந்ததில்லை.

இந்த நோயாளியை குணப்படுத்த இன்னும் மூன்று முதல் நான்கு ஆண்டுகள் ஆகும். ஆனால் இந்தப் பணியை மேற்கொள்ள எங்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. அந்த வேலைத்திட்டத்திற்கு மகா சங்கத்தினரிடமிருந்து கிடைத்த ஆதரவுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.” – என்றார்.















# விமர்சனம் செய்வது எளிது; தீர்வு காண்பது கடினமானது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

"நாட்டின் பொருளாதாரம் ஸ்திரத்தன்மை அடைந்துள்ள நிலையில், மீண்டும் பழைமையான அரசியலில் ஈடுபடலாம் என எவரும் எண்ணிவிடக் கூடாது. முறையான திட்டத்தினூடாகவே நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேச அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று பிற்பகல் சிறிகொத்த கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"4 வருடங்களுக்கு முன்னர் நாம் ஒரு தலைப்பின் அடிப்படையில்தான் தேர்தலுக்கு முகங்கொடுத்தோம். இந்த நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வருகிறது. 2020 வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக வரி குறைக்கப்பட்டதால் வருமானம் வீழ்ச்சியடைகிறது. அந்நியச் செலாவணி இழக்கப்படுகிறது. எனவே, இந்த நாட்டிற்கு 3 பில்லியன் டொலர் கையிருப்பைப் பெறுவதே எங்களின் முதல் பணியாகும் என அன்று அறிவித்தோம். அப்போது யாரும் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. எங்களில் ஒரு குழு ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்குவதற்காக விலகிச் சென்றது.

ஜே.வி.பி நகைத்தது. மொட்டுக் கட்சி விமர்சித்தது. ஐக்கிய தேசியக் கட்சி தனிமைப்பட்டது. ஆனால் நாங்கள் அதை விட்டு விலகவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் உண்மையின் பக்கமே நின்றது. எவ்வளவு கசப்பாக இருந்தாலும் உண்மையைப் பேசியது.

அன்று நாம் அனைவரும் இணைந்து அந்தத் தொகையைத் தேடியிருந்தால் இன்று இப்படி கஷ்டப்பட்டிருக்க மாட்டோம். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருக்காது. கடைசியில் பிரச்சினையில் சிக்கி ஏனைய நாடுகளிடம் உதவி கேட்டபோது இந்தியா எமக்கு மூன்றரை பில்லியன் டொலர் வழங்கியது.

அந்த மூன்றரை பில்லியனைக் கொண்டு ஒன்றரை வருடங்கள் பொருளாதாரத்தை முன்னோக்கி நகர்த்தினோம். 2020 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்திருந்தால் இந்த நாட்டிற்கு இவ்வாறான கதி ஏற்பட்டிருக்காது.

உணவு இல்லை, உரம் இல்லை, எரிபொருள் இல்லை, தொழிற்சாலைகள் மூடப்பட்டன, வருமான வழிகள் இல்லை. அனைவரும் பாதிக்கப்பட்டனர். இந்த நிலையிலே போராட்டம் தொடங்கியது. மொட்டுக் கட்சி அரசாங்கத்திற்கு எதிராக இந்தப் போராட்டம் இடம்பெற்றது. மே 9 அன்று காலி முகத்திடலுக்கு வந்த எதிர்கட்சித் தலைவரையும் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர திஸாநாயக்கவையும் துரத்தினர்.





பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியதன் பின்னர் பிரதமர் பதவியை ஏற்குமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சம்பிரதாய முறைப்படி சஜித் பிரேமதாஸவிடம் கோரினார். ஆனால் அதற்கு அவர் முன்வரவில்லை. பிரேமதாஸவோ ஜே.ஆர். ஜயவர்தனவோ இருந்திருந்தால் இந்த சந்தர்ப்பத்தை நழுவவிட்டிருக்க மாட்டார்கள். அதுதான் உண்மையான ஐக்கிய தேசியக் கட்சியின் போக்காகும்.

ஜே.வி.பியும் தப்பிச் சென்றது. அவர்களில் யாரிடமும் தீர்வு இருக்கவில்லை. பழைமையான அரசியலை மேற்கொண்டு, பொய்யாக நடக்கும் இவர்களிடம் தீர்வு இருக்கவில்லை.

என்னிடம் தீர்வு இருந்ததால் பயமின்றி பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டேன். முன்னர் கூறியதுபோல் 3 பில்லியன் டொலர் கிடைத்தால் இந்நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியும் என அறிந்திருந்ததால் அதற்கேற்ப செயற்பட்டேன். பின்னர் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற பாடுபட்டேன். இந்நாட்டு மக்கள் 2023 கிறிஸ்மஸ் பண்டிகையையும் கடந்த தமிழ் சிங்கள புத்தாண்டு மற்றும் வெசாக் பண்டிகை என்பவற்றையும் எவ்வாறு கொண்டாடினார்கள்

14 ▶




# விமர்சனம் செய்வது எளிது; தீர்வு காண்பது கடினமானது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

**(13ஆம் பக்கத் தொடர்ச்சி...)**

என்பதைப் பார்க்கும்போது வித்தியாசம் தெளிவாகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி என்ற ரீதியில் ஏனைய அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து இந்தப் பிரச்சினையிலிருந்து நாட்டைக் காப்பாற்றினோம். இப்போது நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும். எந்தவொரு கட்சியும் இதுவரை தமது வேலைத்திட்டத்தை முன்வைக்கவில்லை. அவர்களால் அதை முன்வைக்க முடியாது. ஆனால் அரசாங்கம் என்ற ரீதியில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் நட்பு நாடுகளுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை சட்டப்பூர்வமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

நாட்டின் பொருளாதாரத்தை இறக்குமதி பொருளாதாரத்தில் இருந்து ஏற்றுமதி பொருளாதாரமாக மாற்றும் வகையில் இந்த சட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. அந்த இலக்குகளின்படி செயல்பட்டால்தான் இந்த நாடு அபிவிருத்தி அடையும்.

சர்வதேச நாணய நிதியம் இன்றி பணம் பெற வேறு வழியில்லை. எதையாவது பேசலாம். ஆனால் தீர்வு இல்லை. சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக சிலர் கூறுகின்றனர். கடைக்குச் சென்று இன்னும் ஒரு மாதம் கடன் தருமாறு முதலாளியிடம் கேட்பதைப் போன்று இவற்றைச் செய்ய முடியாது. இதைப் புரிந்து கொள்ளாதவர்கள் இதைப் பற்றி பேசுகிறார்கள். இரண்டு வருடங்கள் இதைப் பற்றி பேச்சுவார்த்தை நடத்த வேண்டியிருந்தது.

எனவே, தவறான கருத்துக்களை வெளியிடாமல், இது குறித்து முறையான வேலைத்திட்டம் இருந்தால், அதை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இல்லையேல் இந்தத் திட்டத்தை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். 2020 இல் இதைப் பற்றி நாம் சொன்னபோது அனைவரும் அதனை நிராகரித்துவிட்டனர். அதனால்தான் இந்த நிலைக்கு வந்தோம். எனவே, சர்வதேச நாணய நிதியத்துடனான இந்த திட்டத்தை நாம் நிராகரித்தால், நாம் மேலும் படுகுழியில் விழ நேரிடும்.

எனவே பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான திட்டமொன்று இருக்க வேண்டும். அத்தகைய திட்டம் யாரிடமும் இல்லை என்பதால், அனைவரும் ஒன்றிணைந்து இந்த நாட்டின் பொருளாதாரப் பரிமாற்றச் சட்டத்திற்கு ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். விமர்சனம் செய்வது எளிது. ஆனால் தீர்வு வழங்குவது கடினமானது. எனவே குறை கூறாமல் தீர்வை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்." – என்றார்.







# ஏட்ரியன் நிறுவனத்தின் புதிய முழுநீள தமிழ் திரைப்படத்தின் பூஜை நிகழ்வு

இலங்கையின் முன்னணி இயக்குனர் தினேஷ் கனகராஜின் இயக்கத்தில் ஏட்ரியன் திரைப்பட தயாரிப்பு நிறுவனத்தின் தயாரிப்பில் மிக பிரமாண்டமாக உருவாகவுள்ள இலங்கையின் புதிய முழுநீள திரைப்படமான “அதிரன்” திரைப்படத்தின் பூஜை நிகழ்வும் ஊடகவியலாளர் சந்திப்பும் கொழும்பு 4 அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் திரைப்படத்தின் தயாரிப்பாளர் தீப்திகா ஞானசேகரன் மற்றும் திரைப்படத்தின் கதாநாயகனான முன்னணி நடிகர் சுதர்சனுடன் கதாநாயகியான சிங்கள சினிமாவின் முன்னணி கதாநாயகியான மிச்சலா தில்ஹாரா ஆகியோரும், திரைப்படத்தில் பணியாற்றவுள்ள கலைஞர்களும் தொழில்நுட்பவியலார்களும் கலந்து கொண்டிருந்தனர்.

திரைப்படத்தின் ஆரம்ப பூஜைகளை மாணிக்க விநாயகர் ஆலய பிரதான சிவாச்சாரியார் தலைமையில் நடைபெற்றதை தொடர்ந்து, திரைப்படத்தில் பணியாற்றிய அனைவருக்கும் இனிப்பு பண்டங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

















# மழை தொடர்பில் சிவப்பு எச்சரிக்கை

**நாட்டின் பல பகுதிகளிலும் 150 மில்லி மீற்றர் வரை பலத்த மழை பெய்யலாம் என வளிமண்டல வியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

**மேல், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் இவ்வாறு பலத்த மழை பெய்யக்கூடுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**இந்த நிலையில், கடற்றொழிலுக்கு செல்ல வேண்டாம் என கொழும்பு மாவட்டத்திலுள்ள மீனவர்களுக்கு கடற்றொழில் திணைக்களம் ஆலோசனை வழங்கியுள்ளது.**

**இதனிடையே, மரம் முறிந்து வீழ்ந்ததில், கொழும்பு - கண்டி பிரதான வீதியின் வரக்காபொல பகுதியில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

வெள்ள நீரினால் பாலமொன்று முழுமையாக சேதமடைந்துள்ளதால், அவிசாவளை மற்றும் வக பகுதிகளுக்கிடையிலான ரயில் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளதாக ரயில்வேத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கிங் கங்கையின் தவலம பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது.

வெள்ளம் காரணமாக பல பகுதிகளிலும் மின் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளன என மின்சக்தி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு தேவையான நிதியை விடுவிக்க தயாரென நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டோரை மீட்பதற்காக விமானப் படையின் Bell 212 ரக இரண்டு விமானங்கள் மற்றும் Bell 414 விமானமொன்றும் தயார் நிலையிலுள்ளன என விமானப் படை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அனர்த்தங்கள் தொடர்பான தகவல்களை அறிவிப்பதற்கும் தேவையான உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் 117 எனும் துரித அழைப்பு இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்துமாறு இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது.



# நிவாரண சேவைகளை வழங்க இராணுவத்தினர் கடமைகளில்



நாடளாவிய ரீதியில் நிலவும் சீரற்ற காலநிலையினால் ஆறுகளை அண்டிய தாழ்நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதன் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களை மீட்டு அவர்களுக்கான நிவாரண சேவைகளை வழங்குவதற்காக இராணுவத்தினர் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராணுவத் தளபதியின் பணிப்புரைக்கு அமைய அவர்கள் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கிரிசயல்ல – அயகம பகுதியில் இராணுவக் குழுவொன்று படகுடன் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

தெஹியோவிட்ட – தல்துவ பகுதியிலும், கலதுரு ஓயா – கிரியெல்ல பகுதியிலும், மொரவக, தவலம, திஹகொட மற்றும் நெலுவ பகுதிகளிலும் இராணுவக் குழுக்கள் படகுகளுடன் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மாலிம்பட மற்றும் சாலாவ பகுதிகளில் சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவுகளை வழங்குவதற்காக இராணுவத்தினர் உணவகங்களை அமைத்துள்ளனர்.

அத்துடன், பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்காகவும் அவசரநிலை ஏற்பட்டால் இராணுவத்தினரைத் தயார் நிலையில் வைத்திருக்குமாறும் பாதுகாப்புப் படைத் தலைமையகத் தளபதிகளுக்கு இராணுவத் தளபதி பணிப்புரை விடுத்துள்ளார்.



# அவிசாவளை - கொழும்பு வரை சகல ரயில் சேவைகளும் இரத்து

களனிவெளி ரயில் மார்க்கத்தில் அவிசாவளை முதல் கொழும்பு வரை இடம்பெறும், சகல ரயில் சேவைகளும் நேற்று இரத்துச் செய்யப்பட்டன.

கொஸ்கம மற்றும் வக ஆகிய பகுதிகளுக்கு இடையில் உள்ள பாலமொன்று சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ரயில் மார்க்கத்தில் மொத்தமாக 3 ரயில் சேவைகள் நேற்று இரத்துச் செய்யப்பட்டன என ரயில்வே திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் என்.ஜே.இந்திபொலகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தெற்கு அதிவேக வீதியின் வெலிபென்ன வெளியேறும் பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளதனால், அந்த வீதியூடான போக்குவரத்து தொடர்ந்தும் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக கொழும்பில் இருந்து பயணிக்கும் வாகனங்கள், தொடங்கொட வெளியேறும் பகுதி வரை மாத்திரமே பயணிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மலையக பகுதிகளில் கடும் பனிமூட்டமான வானிலை நிலவுவதனால், வீதிகளில் சாரதிகள் பயணிக்க முடியாத நிலைமை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



# சீரற்ற காலநிலையால் 10 பேர் பலி ஐந்து பேர் காணாமல் போயுள்ளனர்

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் காரணமாக கடந்த 24 மணிநேரத்தில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 05 பேர் காணாமல் போயுள்ளனர் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி –எலபாத்த பகுதியில் வெள்ள நீரில் மூழ்கி பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார் என மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி அயகம பகுதியில் தும்பர பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அதேபோன்று, இரத்தினபுரி கிரியெல்ல பகுதியில் மரம் முறிந்து வீழ்ந்ததில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார் என மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அவிசாவளை – புவக்பிட்டிய எலிஸ்டன் தோட்டப்பகுதியில் வெள்ளத்தில் மூழ்கி ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

78 வயதான தந்தை, 36 வயதான மகள் மற்றும் 7 வயதான பேத்தி ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

வீடு வெள்ளத்தில் மூழ்கிய காரணத்தினாலேயே இந்த மரணங்கள் சம்பவித்துள்ளன.

இதனிடையே, அவிசாவளை ஹேவாயின்ன பகுதியில் மண்மேடு சரிந்து விழ்ந்ததில் 11வயதான சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, மாத்தறை – தெய்யந்தர பல்லேவெல பகுதியில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

20 மற்றும் 27 வயதுடைய இருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் காயமடைந்த மற்றுமொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

அத்துடன், காலி – தவலம பகுதியில் வெள்ளப் பெருக்கில் சிக்கி இருவர் காணாமல் போயுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

23 மற்றும் 53 வயதுடைய இருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

இதேவேளை, மேலும் மூவர் காணாமல் போயுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.









# பாதிப்புகள் தொடர்பில் அறிவிப்பதற்கு தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம்

சீரற்ற காலநிலையினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பில் உடனடியாக அறிவிக்க தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.




இதன்படி 0112 421 820 மற்றும் 0112 421 111 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாகப் பாதிப்புகள் தொடர்பில் அறிவிக்க முடியும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அனர்த்தங்கள் தொடர்பான தகவல்களை அறிவிப்பதற்கும் தேவையான உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் 117 எனும் துரித அழைப்பு இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்துமாறு இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது.



# சம்பூர் சமரனின் ‘விடியலை தேடி’ நூல் திருமலையில் சனியன்று அறிமுக விழா

(ஹஸ்பர் ஏ.எச்)

எழுத்தாளர் தெ.கரிதரன்(சம்பூர் சமரன்) எழுதிய - கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் வெளியீடான - “விடியலைத் தேடி“ எனும் சிறுகதை தொகுப்பு நூல் அறிமுக விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 9.20 மணிக்கு திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான மண்டபத்தில், சம்பூரணி தலைமையில் தமிழ் அமுதம் கலைவட்டத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.



இந்நிகழ்விற்கு முதன்மை அழைப்பாளராக கிழக்கு மாகாண மீன்பிடிப் பணிப்பாளர் சி.சுதாகரநும், கௌரவ அழைப்பாளர்களாக வை.கமலநாதன் (அதிபர்), திருமதி.சி.இலக்கும் தேவி (மாவட்ட இந்து கலாச்சார உத்தியோகத்தர்), க.யோகானந்தன் (ஓய்வு நிலை அதிபர்), செ.செந்தூரன் (நிறுவுனர்- செல்லக்குட்டி அருணோதயம்), வ.யோகசந்திரன் (ஒருங்கிணைப்பாளர் - அகரம் கலைக்கூடம்) ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

நூலின் முதற்பிரதியை நிகழ்வின் முதன்மை அழைப்பாளர் சிவஸ்ரீ மகேத்திரநாதக்குருக்களுக்கு வழங்கி வெளியீட்டு வைத்தார்.

நூலுக்கான அறிமுகத்தை எழுத்தாளர் தி.பவித்திரநும், நூல் திறனாய்வினை, திறனாய்வாளர் வ.முரளிதரநும் வழங்கினர்.

சம்பூரணி தலைமையுரையில் எமது தமிழ் அமுதம் கலைவட்டத்தின் ஏற்பாட்டில் நடைபெறுகின்ற எழுத்தாளர்களின் நூல் வெளியீட்டில் குறிப்பிட்ட எழுத்தாளருக்கு பத்தாயிரம் பணப்பரிசும் நினைவுச்சின்னமும் வழங்கப்படும் எனக் குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



# ஆறு. திருமுருகனின் பிறந்த தினத்தை முன்னிட்டு இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கல்

கலாநிதி செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகனின் பிறந்த நாளை முன்னிட்டு "இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது - 2024" நேற்று வழங்கி வைக்கப்பட்டது.

துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவருமான செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகனின் 63 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு "இளைய தலைமுறை ஆற்றலாளர் 2024 விருது" வழங்கும் நிகழ்வு நேற்று தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அன்னை பூரணி மண்டபத்தில் நடைபெற்றது

இதய சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் ஞானச்சந்திரமூர்த்தி காந்திஜி மற்றும் அண்மையில் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த சாதனையாளர் 13 வயது மாணவன் கரிகரன் தனவந்த் ஆகியோர் "இளைய தலைமுறை ஆற்றலாளர் - 2024" விருதுகளை விருந்தினர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டனர்

இந்நிகழ்வில் நல்லூர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சிர்த்தார்த்தன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணை குழுவின் உறுப்பினரும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தருமாகிய பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், யாழ் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் வைத்தியர் ஆர்.சுரேந்திரகுமார், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விளையாட்டு விஞ்ஞான அலகின் தலைவர் கலாநிதி எஸ்.சபாஆனந்த், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ்.சிவகெங்கா, ஆன்மீகச் சுடர் ரிசி தொண்டுநாத சுவாமிகள் மற்றும் அறிஞர்கள், புத்திஜீவிகள், தெல்லிப்பழை, துர்க்கா தேவி மகளிர் இல்ல மாணவர்கள், நலன் விரும்பிகள், பெரியார்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.











# மட்டக்களப்பு மட்டிக்கழி அம்மன் பீடம் உள்ள காணியை அபகரித்து மீன்வாடி அமைப்பதா?

## இந்து மதத்தை இழிவுபடுத்தும் திட்டமிட்ட செயல் என பொது அமைப்புக்கள் கண்டனம்



**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு மட்டிக்கழி கடற்கரைப்பகுதியில் ஆலயத் தீ மிதிப்பின் போது மஞ்சள் குளிப்பதற்காக அமைக்கப்பட்ட அம்மன் பீடத்தை சுற்றியுள்ள காணியை மீன் வியாபாரி ஒருவர் சட்டவிரேதமாக அபகரித்து, வாடி அமைத்து, இந்து மதத்தை இழிவுபடுத்தும் செயலில் ஈடுபட்டுவருகின்றார். அதற்கு அதிகரிகளும் உடந்தையாக செயற்படுகின்றமையை வன்மையாகக் கண்டிப்பதுடன், அதனை அகற்றாவிடில் மாநகர சபையை இந்து மக்கள் முற்றுகையிட்டுப் போராடுவர் என அந்தப் பிரதேச பொது அமைப்புக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

மட்டிக்கழி அறநெறிப் பாடசாலைக் கட்டடத்தில் ஆலய பரிபாலன சபை மற்றும் பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்திய ஊடக மாநாட்டில் இவ்வாறு எச்சரிக்கை தெரிவிக்கப்பட்டது.

மட்டிக்கழி ஸ்ரீ திரௌபதாதேவி ஆலய தீ மிதிப்பின் போது மஞ்சள் குளிப்பதற்காக பார் வீதியிலுள்ள கடற்கரை பகுதியில் சட்ட ரீதியாக அம்மன் பீடம் அமைக்கப்பட்டு காலம் காலமாக அந்தப் பகுதியில் மீனவர்கள் கூட மீன்படி படகுகளை நிறுத்தாது, மாசடையச் செய்யாது, மீனவர்களும் ஆலைய பரிபாலனசபையினரும் புனித பகுதியாக அதனைப் பராமரித்து வருகின்றனர்.

இந்த நிலையில் குறித்த காணியை மட்டு. மாநகர சபை ஆணையாளர் மீன் வியாபரி ஒருவருக்கு மீன்வாடி அமைப்பதற்கு குத்தகைப் பணமாக ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை பெற்று உடன்படிக்கை மூலம் அனுமதியளித்ததையடுத்து அவர் அந்த பகுதியை அபகரித்து மீன் வாடி அமைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றார்.

இந்து மதத்தை இழிவுபடுத்தும் இந்தச் செயற்பாட்டைக் கண்டித்து ஆலய பரிபாலன சபை மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், மாதர் சங்கங்கள், மீனவர் சங்கங்கள், விளையாட்டு கழகங்கள் போன்ற தரப்புகள் அராங்க அதிபர், பிரதேச செயலாளர், மாநகரசபை ஆணையாளர் உள்ளிட்டவர்களுக்குக் கடித மூலமாகவும் நேரடியாகவும் முறைப்பாடு தெரிவித்தனர்.

இதன் பின்னர் மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்திலும் இது தொடர்பாக முறைப்பாடுகளைத் தெரிவித்தனர். ஆனால் அதற்கான தீர்வை பெற்றுத் தருவதாக தெரிவிக்கப்பட்ட போதும் எதுவிதமான தீர்வும் கிடைக்கவில்லை.

பிரதேச செயலாளருக்குக் கீழ் உள்ள இந்த அரச காணியை பிரதேச செயலாளரின் அனுமதியின்றி, எவ்வாறு மாநகரசபை மீன்வாடி அமைக்க அனுமதி வழங்க முடியும், இது ஒரு மோசடியான செயல் என்பதுடன் இந்து மதத்தை இழிவு படுத்தும் திட்டமிட்ட செயலாகும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்து மதத்தை இழிவு படுத்தும் இந்தச் செயலுக்கு உறுதுணையாக சில அரச அதிகாரிகளும் மீன் வியாபாரியுடன் சேர்ந்து செயற்படுகின்றனர், எனவே காலம் காலமாக இந்த பகுதி மக்களும் ஆலய பரிபாலனசபை பராமரித்துவரும் அந்தப் புனித பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கபட்டுவரும் மீன் வாடி உடன் அகற்றப்பட வேண்டும், இல்லாவிடில் இந்து மக்களை அணி திரட்டி மாநகர சபையை முற்றுகையிட்டுப் போராட்டத்தில் ஈடுபடப் போகிறோம். – என பத்திரிகையாளர் சந்திப்பில் பங்கு கொண்டோர் தெரிவித்தனர்.

# தண்டவாளத்தில் பஸ்ஸை செலுத்திய சாரதி கைது



அவிசாவளை – புவக்பிட்டிய பகுதியிலுள்ள ரயில் தண்டவாளத்தில் பஸ் ஒன்றைச் செலுத்திய சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சாரதி எம்பிலிபிட்டிய பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து எம்பிலிபிட்டிய நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றின் சாரதியே, இவ்வாறு ரயில் தண்டவாளத்தில் பஸ்ஸை செலுத்தியுள்ளார்.

புவக்பிட்டிய பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக, அந்தப் பகுதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தது. போக்குவரத்து நெரிசலை தவிர்த்து செல்லும் நோக்கில், பஸ்ஸின் சாரதி, பஸ்ஸை ரயில் தண்டவாளத்தில் செலுத்தியுள்ளார்.

இந்த நிலையில், பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். பஸ்ஸை பொலிஸார் தமது பொறுப்பிற்கு எடுத்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.





# திருகோணமலை உவர்மலையில் ஆஞ்சநேயர் ஆலய கும்பாபிஷேகம்



(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, உவர்மலை ஸ்ரீ விஷ்வரூப ஆஞ்சநேயர் ஆலய கும்பாபிஷேகம் நேற்றுக் காலை சுபமுூர்த்த வேளையில் பக்திபூர்வமாக நடைபெற்றது.



# மட்டக்களப்பில் சைக்கிள் பேரணி!

(பழுவூரான்)

உலக சைக்கிள் தினத்தை முன்னிட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு கல்லடியில் சைக்கிள் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

இப்பேரணி கல்லடி சரவண வீதியில் அமைந்துள்ள ஜகப் பின் ஏற்பாட்டில் அதன் இணைப்பாளர் சுஜிராஜ் நடராசா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது போக்குவரத்துப் பொலிசார் வீதி ஒழுங்குகளைக் கவனித்தனர். ஆண்கள் மற்றும் பெண்கள் என இருபாலாரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.




# தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரத்தில் தமிழ் தேசியக் கட்சிகளின் நிலைப்பாடு

## சிவில் சமூக அமைப்புகள் அறிக்கை

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு வடக்கில் உள்ள பெரும்பாலான கட்சிகள் ஆதரவு நிலைப்பாட்டை கொண்டுள்ளன என ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரை தெரிவு செய்வதற்கான சிவில் சமூக அமைப்புகள் தெரிவித்துள்ளன.

அறிக்கையென்றினை வெளியிட்டு இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

“2024 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வவுனியாவில் கூடிய தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட மக்கள் அமைப்புகள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றின. அந்தத் தீர்மானம் பின்வரும் விடயங்களைக் கொண்டிருந்தது:-

1. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் தமது இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும் பிரயோகிப்பதற்கான ஒரு களமாக ஜனாதிபதித் தேர்தலைக் கையாள்வது.

2.ஜனாதிபதித் தேர்தலை, ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் என்ற அடிப்படையில் நிராகரித்து, அத்தேர்தலை நடைமுறையில் ஈழத் தமிழ் மக்களுக்கான பொது வாக்கெடுப்பாகக் கையாள்வது.

3. அதற்கமைய ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவது.

4. அதற்காகச் சிவில் சமூகமும் தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது.

5.தமிழ் மக்களின் நீண்ட கால அபிலாசைகளில் ஒன்றான இறைமையுடனான சுயநிர்ணய உரிமையை வெற்றி கொள்வதற்கான பொருத்தமான எதிர்காலக் கட்டமைப்புக்களை நோக்காகக் கொண்டு செயற்படுவது.

மக்கள் அமைப்புக்களும் அரசியற் கட்சிகளும் இணைந்த ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான ஆரம்பக் கலந்துரையாடல்களைக் கட்சிகளுடன் மேற்கொள்வதற்காக தற்காலிகமான ஒரு குழு உருவாக்கப்பட்டது.

அக்குழு தமிழ்த்தேசியப் பரப்பில் உள்ள கட்சிகள் பெரும்பாலானவற்றைச் சந்தித்தது. அச்சந்திப்புகளின் விவரங்களையும் , விளைவுகளையும் இந்த ஆவணம் விவரிக்கிறது.

தமிழரசு கட்சியின் நடப்புத் தலைவர் மாவை சேனாதிராசா அவர்கள் கட்சியின் நிலைப்பாட்டைத் தெரிவிப்பதற்குக் கடந்த மே 19ஆம் திகதி வரையிலும் அவகாசம் கேட்டிருந்தார்.



மே 19ஆம் திகதி நடந்த மத்திய குழுக்கூட்டத்தின் அடிப்படையில் அக்கட்சியானது அது தொடர்பான முடிவை இப்போதைக்கு எடுப்பதில்லை என்று முடிவெடுத்திருப்பதாகத் தெரிகிறது.

எனினும் கட்சிக்குள் ஒரு பகுதியினர் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கிறார்கள். அதற்கு ஆதரவாகப் பொது வெளியில் பேசியும் வருகிறார்கள்.

செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலைப் புறக்கணிப்பது என்ற முடிவில் உறுதியாக உள்ளது என்பது வெளிப்படுத்தப்பட்டது.

பொது வேட்பாளர், தேர்தல் புறக்கணிப்பு ஆகிய இரண்டும் ஏறக்குறைய ஒரே அடிப்படையைக் கொண்டவை என்பதை அக்கட்சி ஏற்றுக் கொள்கின்றது.

எனினும் இரண்டு தெரிவுகளிலும் பொது வேட்பாளரில் தான் ஆபத்து அதிகம் என்று அக்கட்சி நம்புகின்றது. அந்த அடிப்படையில் அவர்கள் தேர்தலைப் புறக்கணிப்பது என்ற முடிவைத் தெரிவித்தார்கள்.

க.வி.விக்னேஸ்வரன் அவர்களின் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியானது தொடக்கத்திலிருந்தே பொது வேட்பாளரை ஆதரித்து வருகிறது. இந்த விடயத்தில் பொது மக்கள் அமைப்புகளின் முன்னெடுப்புக்கு அக்கட்சி தனது பூரண ஆதரவைத் தெரிவித்தது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் (DTNA) கூட்டாக முடிவெடுத்து அறிவிப்பதற்குக் கால அவகாசம் கேட்டிருக்கிறார்கள்.

எனினும் கூட்டுக்குள் காணப்படும் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியானது தொடக்கத்திலிருந்தே பொது வேட்பாளர் என்ற கோரிக்கையை முன்வைத்து வந்தது. அதற்கு ஆதரவாகப் பொது வெளியில் பேசியும் வருகின்றது.

எம்முடனான சந்திப்பிலும் அக்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திய சுரேஷ் பிரேமச்சந்திரன் அதே நிலைப்பாட்டையே வெளிப்படுத்தியிருந்தார்.

சந்திப்பில் கலந்து கொண்ட தமிழீழ விடுதலை இயக்கம் அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் பொது வேட்பாளர் என்ற விடயத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டார்.

எனினும் அது ஒரு சாதாரண விடயம் அல்ல என்பதனை வலியுறுத்தினார். தமிழ்ப் பொது வேட்பாளர் தோற்கக்கூடாது.

அதற்காக கடுமையாக உழைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். கட்சிகளும் பொதுமக்கள் அமைப்புகளும் இணைந்த ஒரு கட்டமைப்பு அவசியம் என்றும் அதற்குத் தாங்கள் தயார் என்றும் கூறினார்.

ந.ஸ்ரீகாந்தா அவர்களின் தமிழ்த் தேசியக் கட்சியானது பொது வேட்பாளரை முழுமனதோடு ஏற்றுக் கொள்கிறது. அதில் உள்ள சாதக, பாதகங்களை அக்கட்சி சுட்டிக் காட்டியது.

ஜனநாயகப் போராளிகள் கட்சி, பொது வேட்பாளரை ஏற்றுக்கொள்கிறது. அதற்காகப் பொது மக்கள் அமைப்புகளோடு இணைந்து செயற்படத் தாம் தயார் என அதன் தலைவர் சி. வேந்தன் உள்ளிட்ட பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) அமைப்பு தமது நிலைப்பாட்டைத் தெரிவிப்பதற்காகத் தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்கள் கால அவகாசம் கேட்டார்.

ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது என்ற விடயத்தை அக்கட்சி கொள்கையளவில் ஏற்றுக் கொண்டாலும், அதில் இருக்கக்கூடிய இடர்களைக் குறித்து அக்கட்சி ஆழமாக யோசிக்கின்றது. எனவே தமது முடிவை அறிவிப்பதற்குக் கால அவகாசம் கேட்டது.

அங்கத்துவக் கட்சிகளில் அநேகமானவை தமது ஆதரவு நிலைப்பாட்டை வெளிப்படுத்திய போதும் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எனும் அடிப்படையில் ஒன்று கூடி பொது வேட்பாளர் தொடர்பான தம்முடைய உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை அறிவிக்கக் கால அவகாசம் கோரியிருக்கின்றனர்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் பொது வேட்பாளர் என்ற தெரிவைத் தொடக்கத்தில் இருந்தே ஆதரித்து வருகிறது. அதன் மேடைகளில் ஏற்கனவே அது தொடர்பாகப் பேசத் தொடங்கி விட்டது. எம்முடனான சந்திப்பிலும் பொ. ஐங்கரநேசன் அவர்கள் அதே நிலைப்பாட்டைத் தெரிவித்தார்.

அனந்தி சசிதரனின் ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் பொது வேட்பாளரைக் கொள்கையளவில் ஏற்றுக் கொள்கிறது. அதற்கு ஆதரவு தெரிவிக்கின்றது.

தொடர்ச்சி ▼

# தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரத்தில் தமிழ் தேசியக் கட்சிகளின் நிலைப்பாடு

தொடர்ச்சி ▲

கட்சிகளுடனான சந்திப்புகளின் பின்னர் கட்சித் தலைவர்களைத் தவிர கட்சிகளுக்குள் ஜனாதிபதித் தேர்தலைக் குறித்துத் துலக்கமான, வெளிப்படையான நிலைப்பாடுகளை கொண்டிருக்கும் அரசியல்வாதிகளையும், கட்சிகளைச் சாராத அரசியல்வாதிகளையும் எமது குழு சந்தித்தது.

அதன்படி க.அருந்தவபாலன் அவர்கள் பொது வேட்பாளர் என்ற தெரிவை முழுமையாக ஏற்றுக் கொள்கிறார். அதற்காக உழைக்கவும் தயாராகக் காணப்படுகின்றார். எமது குழு தமிழரசுக் கட்சியின் தலைவரை உத்தியோகபூர்வமாக சந்தித்தது.

எனினும் எதிர்காலத்தில் கட்சித் தலைமைக்காகப் போட்டியிடக்கூடிய இருவரையும் சந்திப்பது பொருத்தமானதாக இருக்குமென விதந்துரைக்கப்பட்டதால் சிவஞானம் ஸ்ரீதரன் அவர்களையும் எம்.ஏ.சுமந்திரன் அவர்களையும் சந்திப்பது என்று குழு முடிவெடுத்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் தமிழரசுக் கட்சிக்குள் பொது வேட்பாளர் என்று தெரிவைத் தொடர்ச்சியாக ஆதரித்து வருகிறார். அதற்கு ஆதரவாகப் பொது வெளியில் பேசியும் வருகிறார். எமது சந்திப்பிலும் தமது தனிப்பட்ட ஆதரவு நிலைப்பாட்டை அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர், எம்.ஏ. சுமந்திரன் அவர்கள் பொது வேட்பாளர் தொடர்பில் உள்ள ஆபத்துக்களைச் சுட்டிக்காட்டிக் கருத்துத் தெரிவித்தார்.

எனினும் தமிழ் மக்களை ஒன்று திரட்டுவதற்கு இது ஒரு சரியான தருணம் என்றும், இத்தேர்தலில் தமிழ் மக்களை ஒன்று திரட்டத்தவறினால் அடுத்த ஆண்டு நடக்கக்கூடிய எல்லாத் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் சிதறி வாக்களிப்பார்கள் என்பதையும் சுட்டிக்காட்டிய பொழுது, அந்தத் தர்க்கத்தை அவர் ஏற்றுக்கொண்டார்.

தமிழ் மக்களை ஒரு மையத்தில் ஒன்றிணைப்பது என்ற விடயத்தில் அவருக்கும் எமக்குமிடையே வேறுபாடுகள் இருக்கவில்லை. எம்மைச் சந்திக்கும் பொழுது அவர் பொது வேட்பாளரை நிராகரிப்பதற்கு ஒரு காரணத்தை வைத்திருந்தார்.

ஆனால் சந்திப்பு முடிந்த பொழுது பொது வேட்பாளரை ஆதரிப்பதற்கு மிகப் பலமான ஒரு நடைமுறைக் காரணத்தை ஏற்றுக் கொண்டதைத் தெரிவித்துச் சென்றார்.

பொது வேட்பாளர் தேவையா என்பது தொடர்பாகப் பொதுவெளியில் உரையாடல்களை நடத்துவது நல்லது என்று எம். ஏ சுமந்திரன் அவர்கள் சுட்டிக் காட்டியிருந்தார்.

எனினும் பொது வேட்பாளர் தொடர்பாக வவுனியாவில் 2024 ஏப்ரல் 30ம் திகதி நடைபெற்ற பொது மக்கள் அமைப்புகளின் கூட்டிணைவும், அதன் முன்னரும் பின்னரும் எம்மால் பல்வேறு மக்கள் அமைப்புகளுடன் நடத்தப்படும் கலந்துரையாடல்களும் பொது வெளியில் நடத்தப்படும் உரையாடல்கள்தான்.

அவ்வாறான உரையாடல்களே வவுனியாவில் பொதுமக்கள் அமைப்புகளின் கூட்டிணைவுக்கும், பொது வேட்பாளர் தொடர்பான கொள்கை அடிப்படைகளுக்கும், வவுனியாப் பிரகடனத்திற்கும் வழிவகுத்திருந்தன, இன்று வலுச் சேர்க்கின்றன.

இன்றுள்ள நிலையில் பொது வேட்பாளர் தேவையா என்ற உரையாடலுக்குப் பதிலாகப் பொது வேட்பாளர் பிரதிநிதித்துவப் படுத்தும் கொள்கை நிலைப்பாடுகளுக்கு ஆதரவைத் திரட்டும் உரையாடல்கள் நிகழ்வதே பொருத்தமானது என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

இச் சந்திப்புக்கள் பெருமளவுக்கு யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்தவை. ஏனைய மாவட்டங்களில் உள்ள தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளோடும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தற்போதைய உறுப்பினர்கள், ஏனைய அரசியற் பிரமுகர்கள் என்பவர்களுடனும் எதிர்காலத்தில் சந்திப்புகள் இடம்பெறும். அந்த சந்திப்புக்களின் விவரங்கள் பின்னர் வெளியிடப்படும்.

மேற்கண்ட சந்திப்புகளின் பின் பொது மக்கள் அமைப்புகள் மீண்டும் விரைவில் நேரடியாகச் சந்திப்பது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அச்சந்திப்பில் கட்சிகளின் நிலைப்பாடுகள் ஆராயப்படுவதுடன் பொது மக்கள் அமைப்புகளின் கூட்டிணைவின் அடுத்த கட்ட வேலைத் திட்டங்கள், நடவடிக்கைகள் குறித்த முடிவுகளும் மேற்கொள்ளப்படும். – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதியிடம் ஆலோசனையை பெற்று அரசியல் தீர்மானங்களை எடுப்பதில்லை

## நாமல் ராஜபக்ஷ கூறுகின்றார்



“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பதவியில் வைத்துக் கொண்டு நாங்கள் எமது ஜனாதிபதி வேட்பாளரை அறிவித்தால் அரசாங்கம் நெருக்கடிக்குள்ளாகும்.ஜனாதிபதி தேர்தல் குறித்து தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி அறிவிக்க வேண்டும். ஜனாதிபதியிடம் ஆலோசனை பெற்று நாங்கள் அரசியல் தீர்மானத்தை எடுப்பதில்லை.”

– இவ்வாறு பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக் ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் ஒன்றிணைந்தால் நாங்கள் எமது அரசியல் தீர்மானத்தை அறிவிப்பதாகக் குறிப்பிடுவது முறையற்றது. ஏனெனில் எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் ஒன்றிணைவதால் எமக்கு அரசியலில் எவ்வித பயனும் கிடைப்பதில்லை அதேபோல் எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

இடைக்கால ஜனாதிபதியாகவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்தோம். ஜனாதிபதியின் பதவிக் காலம் எதிர்வரும் நவம்பர் மாதத்துடன் நிறைவடையும். அடுத்த ஜனாதிபதி பதவிக்கு தற்போதைய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதாக நாங்கள் அவருக்கு வாக்குறுதி வழங்கவில்லை.

ஜனாதிபதி வேட்பாளர் குறித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம். சிறந்த கொள்கைத் திட்டம் உள்ள தரப்பினருடன் கூட்டணியமைப்போம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் வைத்துக் கொண்டு நாங்கள் எமது ஜனாதிபதி வேட்பாளரை அறிவித்தால் அரசாங்கம் நெருக்கடிக்குள்ளாகும். ஜனாதிபதியிடம் ஆலோசனை பெற்று நாங்கள் அரசியல் தீர்மானங்களை எடுப்பதில்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொள்கைகளை முன்னிலைப்படுத்தி அரசியல் தீர்மானங்கள் எடுப்பதற்கு விசேட கவனம் செலுத்தியுள்ளோம். எக்காரணிகளுக்காகவும் கட்சியின் கொள்கைகளை விட்டுக்கொடுக்கப் போவதில்லை.”– என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.06.2024

## மேஷம்

சுயமுயற்சியை சார்ந்திருங்கள். அதனால் தன்னம்பிக்கை அதிகரித்து பல ஆச்சரியங்களை ஏற்படுத்தலாம். உங்கள் செயல்களை சாமார்த்தியமாக கையாளுங்கள்.

பணிச்சூழல் சிறப்பாக இருக்கும். உங்கள் மீது நம்பிக்கை வைத்து பணியாற்றுங்கள். நெருக்கமானவர்களாக இருப்பவர்களைக் கூட கண்மூடித்தனமாக நம்பாதீர்கள்.

தொடர்பாடலில் உள்ள குறைபாடு காரணமாக உறவில் இணக்கம் கெடும். கவனமாக இருக்க வேண்டும்

வரவும் செலவும் இணைந்து காணப்படும். வரவுக்கும் செலவுக்கும் இடையிலான இடைவெளி உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

தலைவலி, கால்களில் வலி, மற்றும் முதுகுவலி போன்ற உபாதைகளால் வருத்தப்படுவீர்கள்.யோகா பழகவும்.

## ரிஷபம்

உங்கள் அணுகுமுறையில் யதார்த்தம் வேண்டும். நன்றாக திட்டமிட வேண்டியது அவசியம்.

பணிச்சூழல் மிதமான பலன்களையே அளிக்கும். பணிகளின் சுமை அதிகமாக காணப்படும். அதை சமாளிக்கும் வழிமுறைகளைத் தேடுவீர்கள்.

உறவில் இணக்கமான நிலை இருக்காது. நீங்கள் அனுசரித்து நடக்க வேண்டும்.

நிதிக்கான அதிர்ஷ்டம் குறைந்து காணப்படுகின்றது. எனவே நிதி விஷயங்களை கவனமாக கையாள்வது அவசியம்.

கண்களில் ஏற்படும் எரிச்சல் காரணமாக கவலைகள் ஏற்படும்.செரிமானப் பிரச்சினைகளும் ஏற்படலாம்.

## மிதுனம்

இன்று ஆதாயம் கிடைக்கும் நாள். இன்று உங்கள் மனம்அமைதியாக இருக்கும். நீங்கள் சில முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம்.

உங்கள் பணி உங்களுக்கு ஏற்றதாக இருக்கும். நீங்கள் நல்ல பெயரை சம்பாதிப்பீர்கள்.

குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். குடும்பத்துடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள்.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் சம்பாதிப்பதற்கான சாத்தியம் உள்ளது. சேமிப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியத்தை சரிபார்த்துக் கொள்ளுங்கள். தியானம் மேற்கொள்வது சிறந்தது.

## கடகம்

உங்கள் காரியங்களை எளிதாக செய்வீர்கள். அதிக நண்பர்கள் மற்றும் தொடர்புகளைப் பெறுவீர்கள்.

உங்கள் பணிகளில் நல்ல பலன்களைப்பெறுவீர்கள்.

இன்று குடும்ப நல்லுறவைப் பேண குடும்பத்துடன் அனுசரித்துப் போக வேண்டியது அவசியம்.உங்களுக்கு மிகவும் நெருங்கியவர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம்.

பொருளாதார வளர்ச்சி சிறப்பாக உள்ளது. நிதி சம்பந்தமான சில முக்கிய முடிவுகளை இன்று நீங்கள் எடுக்கலாம்.

குடும்ப அங்கத்தினர்களுக்கு மருத்துவ சிகிச்சை செய்யும் செலவு ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் கவலைகள் காணப்படும்.

## சிம்மம்

உங்கள் வளர்ச்சிக்கும் அதை அடைவதற்கும் இடையே உள்ள இடைவெளிகளை நீக்கி வளர்ச்சி பெறுவீர்கள். அணுகுமுறையில் யதார்த்தத்தை கடைபிடிக்க முயலுங்கள்.

உங்கள் பணயில் சில மாற்றங்கள் காணப்படும். இன்று பொறுமை மிகவும் அவசியம்.

இன்று குடும்ப உறவினர்களிடம் குறைந்த நல்லிணக்கமே காணப்படும்.

இன்று நிதி வளர்ச்சிக்கு சாதகமான நாள் அல்ல. பணத்தை கவனமாக செலவு செய்யவும்.

ஆரோக்கியமாக இருக்க நல்ல உணவுமுறையை பின்பற்ற வேண்டும்.முட்டி மற்றும் மூட்டு வலிக்கான வாய்ப்புகள் உள்ளன.

## கன்னி

இன்று மொத்தத்தில் நல்ல நாள். ஆனால் சில தடைகளை நீங்கள் சந்திக்க நேரலாம். உங்கள் நேரமும் கவனமும் தேவைப்படும் விஷயங்களுக்கு நேரத்தை ஒதுக்கி கவனம் செலுத்துங்கள்.

இன்று சவாலான பணிகள் செய்ய வேண்டியிருக்கும். அதற்கு நீங்கள் திட்டமிட வேண்டியது அவசியம்.

நெருங்கிய குடும்ப உறவினர்களிடம் அனுசரித்து செல்ல வேண்டும். நட்பான அனுகுமுறை உங்களுக்கு நன்மை தரும்.

இன்று ஏற்ற இறக்கங்கள் காணப்படும். ஸ்திரத் தன்மையை பராமரிக்க செலவுகளை கவனித்துச் செய்யவும்.

தலைவலி மற்றும் சளி உபாதைகளால் பாதிக்கப் படுவீர்கள். ஓய்விற்கென்று நேரம் ஒதுக்குங்கள்.

## துலாம்

இன்று பலவிதமான செயல்களில் ஈடுபட்டிருப்பீர்கள். உங்கள் தொடர்பாடலில் கவனமாக இருங்கள்.

பணியில் உங்கள் பொறுமை சோதிக்கப்படும். நீங்களே உங்களை உற்சாகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

குடும்ப பிணைப்பு வலுப்பட நீங்கள் உங்கள் குடும்ப அங்கத்தினர்களுடன் உங்களின் சிறப்பான நேரத்தை செலவிடவேண்டும்.

நிதிநிலையைப் பொறுத்தவரை இன்று சோதனையான நாள். பணத்தை கவனமாக செலவு செய்ய வேண்டும்.

சில அசௌகரியங்கள் காணப்படும். யோகா மற்றும் தியானம் பழகுங்கள்.

## விருச்சிகம்

முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு இன்று உகந்த நாள்.

இன்று பணியில் சாதகமான பலன்கள் கிடைக்கும்.உங்கள் மேலதிகாரிகள் உங்களை பாராட்டுவார்கள்.

உங்கள் குடும்ப அங்கத்தினர்களுடன் நல்ல உறவை பராமரிக்க வேண்டும். இன்று மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

கடன் வகையில் இன்று உங்களுக்கு பணம் கிடைப்பதற்கான சாத்தியம் உள்ளது. இன்று உங்களுக்கு அனுகூலமான நாள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.06.2024




முன்னேற்றத்தை அடைவதற்காக நீங்கள் பல யோசனைகளைக் கொண்டு பரிசோதிப்பீர்கள்.

இன்று உங்கள் பணிகளைச் செய்வதற்கு சிறந்த முறைகளைக் கையாள்வீர்கள். உங்கள் தொடர்பாடல் திறமை காரணமாக உங்கள் கீழ்பணிபுரிபவர்களிடம் நல்லுறவைப் பேணுவீர்கள்.

இன்று அமைதியாக இருந்து நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். நல்ல மனநிலையின் மூலம் அது சாத்தியமாகும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். பணம் வீணாகாதவாறு சீராகப் பயன்படுத்தங்கள்.

காய்ச்சல் அல்லது நரம்புப் பிரச்சினைகள் எற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதால் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்று பலன்கள் கலந்தே காணப்படும். நேர்மறையான அணுகு முறையை கொண்டிருங்கள்.

பணியில் பாதுகாப்பற்ற சூழல் காணப்படும். வேலையின் தரத்தில் கவனம் செலுத்துங்கள். முடிவில் அது வெற்றியை அளிக்கும்.

உறவில் அன்பு குறைந்து காணப்பட வாய்ப்புள்ளது. சூடான விவாதங்கள் ஏற்படலாம்.

நிதிநிலைமை சீராக இருப்பதற்கு உங்கள் செலவுகளில் கவனம் செலுத்துங்கள்.

தலைவலி மற்றும் பல்வலி போன்ற பிரச்சினைகளுக்கு வாய்ப்பு இருப்பதால் ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று பலன்கள் கலந்தே காணப்படும். குடும்பம் மற்றும் அதன் வளர்ச்சி சம்பந்தமான பொறுப்புக்கள் காணப்படும். பயணங்கள் ஏற்படலாம்.

பணி நிமித்தமாக பயணங்கள் ஏற்படலாம். கவனத்தில் கொள்ள வேண்டிய நிறைய பொறுப்புகள் காணப்படும்.

தகவல் தொடர்பாடலில் உள்ள பிரச்சனைகள் காரணமாக உங்கள் உடன்பிறந்தோர் மற்றும் உறவினர்களுடன் சச்சரவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும்.

ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். கால்களில் வலி காரணமாக அசௌகரியங்கள் காணப்படும்.




மாறும் சூழ்நிலைக்கேற்ப உங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். அசௌகரியங்கள் காணப்படலாம்.

இன்று பணியில் பதற்றமான தருணங்கள் காணப்படும். பொறுமையோடு இருங்கள்.

உரையாடும் போது வீண் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். வார்த்தைகளை கவனமாகக் கையாள வேண்டும் அல்லது முடிந்தால் மௌனமாக இருந்து விட வேண்டும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இல்லை. திட்டமிட்டு பணத்தை முறையாக பயன்படுத்தங்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. முட்டி வலி, கண்களில் எரிச்சல் மற்றும் உயர் அழுத்தம் ஆகியவற்றிற்கான வாய்ப்புகள் உள்ளன. இறை வழிபாடு சிறந்தது.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA | No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co | www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388



Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

